IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.9

| | | |
|---|---|---|
| NAME | : | SATHISHKUMAR |
| FATHER'S NAME | : | CHELLAMUTHU |
| VILLAGE | : | ALAMELUMANGAPURAM |
| OCCUPATION | : | SHOP |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 27th day of APRIL 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் அலமேலுமங்காபுரத்தில் வசித்து வருகிறேன். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் விஜயகுமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வள்ளிமலை கூட்ரோடில் இருந்து வடக்காக செங்குட்டை கிராமம் உள்ளது என்றால் சரிதான். வள்ளிமலை கூட்ரோட்டில் இருந்து கோர்ட் வழியாகத்தான் கிளித்தான் பட்டறை செல்ல வேண்டும் என்றால் சரிதான். இறந்த சுப்பிரமணி என்னுடைய மாமனார் ஆவார். சம்பவ இடத்தை போலிசாருக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். எந்த நிலை அதிகாரி ஆவணத்தை எழுதினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் எங்கு வைத்து தயார் செய்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சாலையை பிரிக்கும் தடுப்பில் இருந்து 5 அடி தூரத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சுப்பிரமணி எதற்காக சென்றார் என்று தெரியாது. அந்த சாலையை எதற்காக கடந்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகாமையில் வீடு மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததால் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.10

| | | |
|---|---|---|
| NAME | : | VIJAYAKUMAR |
| FATHER'S NAME | : | VARADHAN |
| VILLAGE | : | KILITHAMPATTARAI |
| OCCUPATION | : | TAILOR SHOP |
| AGE | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 27th day of APRIL 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கிளித்தான் பட்டைறையில் வசித்து வருகிறேன். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். டைலர் கடை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சதீஷ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வள்ளிமலை கூட்ரோடில் இருந்து வடக்காக செங்குட்டை கிராமம் உள்ளது என்றால் சரிதான். வள்ளிமலை கூட்ரோட்டில் இருந்து கோர்ட் வழியாகத்தான் கிளித்தான் பட்டறை செல்ல வேண்டும் என்றால் சரிதான். இறந்த சுப்பிரமணி என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். சம்பவ இடத்தை போலிசாருக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். எந்த நிலை அதிகாரி ஆவணத்தை எழுதினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் எங்கு வைத்து தயார் செய்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சாலையை பிரிக்கும் தடுப்பில் இருந்து 5 அடி தூரத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ

இடத்திற்கு சுப்பிரமணி எதற்காக சென்றார் என்று தெரியாது. அந்த சாலையை எதற்காக கடந்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகாமையில் வீடு மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். இரண்டு சென்டர் மீடியனுக்கு நடுவே சாலையை கடக்க வழி உள்ளது என்றால் சரிதான். அதில் இருந்து 200 மீட்டர் தொலைவில் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததால் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 27.04.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.